தினகரன்
கோவை 29 ஜூலை 2012

# தசை செயலிழப்பால் பாதித்தவர்களை உற்சாகப்படுத்திய பட்டம் விடும் நிகழ்ச்சி

கோவை, ஜூலை 29:தசை செயலிழப்பால் பாதித்த குழந்தைகளை உற்சாகப்படுத்த பட்டம் விடும் நிகழ்ச்சி கோவையில் நேற்று நடந்தது. ஏராளமான குழந்தைகள் அதை பார்த்து மகிழ்ந்தனர்.

உறவுமுறை திருமணங்களால் பிறக்கும் குழந்தைகளுக்கு உடல் உறுப்புகள் பாதிக்கப்படும் என்கிறது மருத்துவ ஆய்வுகள். டச்சின் மஸ்குலர் டிஸ்ட்ரோபி எனப்படும் தசை செயல் இழப்பால் பார்திப்பு ஏற்படுவதை தடுக்க ஒருங்கிணைந்த பல்நோக்கு கண்காணிப்பு திட்டத்தை மத்திய அரசு ஏற்படுத்தியுள்ளது. தமிழகத்தில் இந்த திட்டம் பரிட்சார்த்தமாக கோவை உட்பட 5 மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கோவையில் பல்நோக்கு கண்காணிப்பு மையத்தின் சார்பில் தசை செயலிழப்பால் பாதித்த குழந்தைகளுக்கான பல்வேறு நிகழ்ச்சிகள் நேற்று நடத்தப்பட்டது. இதன் ஒரு கட்டமாக கொடிசியா அரங்கில் பட்டம் விடும் நிகழ்ச்சி நடந்தது. முன்னதாக தசை செயல் இழப்பால் பாதித்த சில குழந்தைகளை பட்டங்களை தயாரித்தனர். பின்னர் ராட்சத பட்டம் ஒன்று பறக்கவிடப்பட்டது. இந்த பட்டத்தை போல் நாங்களும் சிறகடித்து பறக்கமுடியும் என்ற உற்சாகத்தையும், தெம்பையும் அக்குழந்தைகளிடம் ஊட்டுவதற்கு பட்டம் பறக்கவிடும் நிகழ்ச்சி நடத்தப்பட்டதாக அதன் ஒருங்கிணைப்பாளர்கள் தெரிவித்தனர்.

கோவை் குறிஞ்சி மருத்துவ மனையில் தசை செயல் இழப்பால் பாதித்த குழந்தைகளுக்கு கவுன்சலிங், முடநீக்கியல் பயிற்சி, பருவநிலை மாற்ற காலங்களில் தக்க தடுப்பூசிகள் குழந்தைகளுக்கு வழங்குதல் போன்றவை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.





மத்திய அரசின் தொண்டு நிறுவனமான மாலிகுளர் டயக்னோஸ்டிக்ஸ் கவுன்சலிங் மற்றும் ஆராய்ச்சி மையம், மாநில ஊரக நலவாழ்வு இயக்கமும் இணை
தசை செயலிழப்பால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான புத்துணர்வு முகாம்’ கோவை கொடிசியா வளாகத்தில் நேற்று நடந்தது. இதில் தசை செயலிழ
பாதிக்கப்பட்ட குழந்தைகள் பட்டம் தயாரித்தனர். அடுத்தப்படம்: அந்த குழந்தைகளுக்காக கேரளா கைட் லைப் பவுண்டேசன் சார்பில் கழுகு, மற்றும் ஆக்
போன்ற ராட்சத பட்டம் பறக்கவிட்டு காண்பிக்கப்பட்டது.